26 MAY 2020

**சுருக்கம்**

தமிழ்நாடு அமைச்சுப்பணி – வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை – வேலைவாய்ப்புப் பிரிவு – காலஞ்சென்ற திரு. தி. ராஜேந்திரன், (அலுவலக உதவியாளர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான தொழில்நெறி வழிகாட்டும் நிலையம், திருநெல்வேலி) என்பவரின் மகன் திரு. ரா. ராஜா அவர்கள் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்ககத்தில் நியமனம் செய்யப்பட்டது – இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (என்2) துறை**

அரசாணை (3டி) எண்.9

நாள்: 18.03.2020
விகாரி வருடம், பங்குனி – 5,
திருவள்ளுவர் ஆண்டு 2051

படிக்க:–

1. இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை அவர்களின் கடிதம் எண். நிர்2/39961/2016, நாள். 03.02.2020.
2. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை, நாள். 01.08.2018.
3. அரசாணை (நிலை) எண் 18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை, நாள் 23.01.2020.

--------

**ஆணை:-**

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின், வேலைவாய்ப்பு பிரிவில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான தொழில்நெறி வழிகாட்டும் நிலையம், திருநெல்வேலி அலுவலகத்தில் அலுவலக உதவியாளராகப் பணிபுரிந்து வந்த திரு. தி. ராஜேந்திரன் அவர்கள் 27.07.2014 அன்று அரசுப் பணியில் இருந்தபோது மறைந்ததையொட்டி, அவரது மறைவிற்குப் பின் போதிய வருமானமின்றி அவரது குடும்பம் வறுமையில் வாடுவதாகத் தெரிவித்து, அவரது மனைவி திருமதி R. பொன்ரோஸ் என்பவர் தனது மகன் திரு. ரா. ராஜா என்பவருக்குக் கருணை அடிப்படையில் அரசுப் பணி நியமனம் வழங்குமாறு கோரியிருந்தார் என்றும், அவரது குடும்பத்தில் எவரும் அரசுப் பணியிலோ, தனியார் துறையிலோ பணிபுரியவில்லை என்பதாலும், அவரது குடும்பம் வறுமையில் வாடுவதைக் கருத்தில் கொண்டும் மறைந்த அரசுப் பணியாளரின் வாரிசுதாரரான திரு. ரா. ராஜா என்பவருக்குக் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணிநியமனம் வழங்கலாமென முடிவெடுக்கப்பட்டது என்றும், அதனைத் தொடர்ந்து திரு. ரா. ராஜா அவர்களுக்கு பணி நியமனம் வழங்கப்பட்டது என்றும், அப்பணியாளர் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்ககத்தில் 27.12.2017 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வருகின்றார் என்றும் தெரிவித்து, அவரது பணியினை வரன்முறை செய்யுமாறு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநர் கோரியுள்ளார்.

Scanned with CamScanner

2. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநரின் கருத்துருவை கருணை அடிப்படையில் பணி நியமனம் தொடர்பாக நடைமுறையிலுள்ள அரசாணைகளின்படி அரசு கவனமுடன் பரிசீலி திரு. ரா. ராஜா, இளநிலை உதவியாளர், அவர்களது பணியினை, அவர் அப்பணியிடத்திற்குத் தேவை உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் இயக்ககத்தில் இளநிலை உதவியாளர் பணியிடத்தில் 27.12.2017 முற்பகல் முதல் வரன்முறை செ ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், தனியர் தனது ஆ ஊதிய உயர்வு மற்றும் நிலுவைத் தொகை ஏதும் இருப்பின் அவற்றை விதிகளின்படி பெ தகுதியுடையவராகிறார்.

3. இவ்வரசாணை, முறையே தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ2) துறை மற்றும் பணியா மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (ஜி) துறை ஆகியவற்றின் கோப்பு எண்.2360/க்யூ2/2020 மற்றும் அலுவ சார்பற்ற எண்.9238/ஜி2/2020 நாள் 13.03.2020–இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

முகமது நசிமுத்தின்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
திரு. ரா. ராஜா, இளநிலை உதவியாளர், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும்
தொழில்நெறி வழிகாட்டு மையம், நாகர்கோவில்.
(வழி: இயக்குர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை,
கிண்டி, சென்னை–600 032.)
இயக்குநர்(மு.கூ.பொ), வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, கிண்டி, சென்னை–600 032.

நகல்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலாளர்,
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை–600 009.
அரசு இணைச் செயலாளரின் நேர்முக எழுத்தர், தொழிலாளர் மற்றும்
வேலைவாய்ப்புத் துறை, சென்னை–600 009.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ) துறை, சென்னை–600 009.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, சென்னை–600 009.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (அநமு–2) துறை, சென்னை–600 009.
இருப்பு கோப்பு / உபரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்

Scanned with CamScanner